**நவம்பர் – 15**

# TNPSC துளிகள்

- சர்வதேச ஹாக்கிக் கூட்டமைப்பின் புதிய தலைவராக சீனாவின் மக்காவ் என்ற தன்னாட்சி பிராந்தியத்தைச் சேர்ந்த ஆசிய ஹாக்கிக் கூட்டமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரி முகமது தயப் இக்ராம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## அனைவருக்குமானப் போக்குவரத்து சவால் – நிலை 2




- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது, "அனைவருக்குமானப் போக்குவரத்து சவால்" என்பதின் இரண்டாம் நிலையினை அறிமுகப் படுத்தியது.
- இது இந்தியக் குடிமக்களின் போக்குவரத்து அனுபவத்தினை எளிதாக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சவாலானது, முறைசார் மற்றும் மற்றும் முறைசாரா பொதுப் போக்குவரத்தில் மேற்கொள்ளப்படும் எண்ணிமம் சார்ந்த கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க முயல்கிறது.
- இந்தச் சவால் பிரச்சினைகளைக் கண்டறிதல், அதற்கானத் தீர்வுகளை உருவாக்குதல் மற்றும் அதற்கான மாதிரி சோதனை ஆகிய 3 நிலைகளைக் கொண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட இந்தச் சவாலின் முதல் நிலையில் 130க்கும் மேற்பட்ட நகரங்கள் பங்கேற்றுள்ளன.
- இரண்டாம் நிலைக்குத் தகுதி பெற்ற 46 நகரங்கள் 165க்கும் மேற்பட்ட பிரச்சனைகள் குறித்த அறிக்கையை உருவாக்குவதற்கான கணக்கெடுப்புத் தரவைப் பயன்படுத்தச் செய்தன.
- நகரங்களால் அடையாளம் காணப்பட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கான தீர்வுகளை

உருவாக்கிடச் செய்வதற்காக வேண்டி, தற்போது புத்தொழில் நிறுவனங்களுக்கு இந்த சவாலின் இரண்டாம் நிலை அணுகுமுறை வழங்கப்பட்டுள்ளது.

## குடிமக்கள் கருத்துணர்வு ஆய்வு 2022

- இது எளிதாக வாழ்வதற்கான குறியீட்டின் ஒரு பகுதியாக இந்த ஆய்வானது மேற் கொள்ளப் படுகிறது.
- இது 2020 ஆம் ஆண்டில் முதல் முறையாக மேற்கொள்ளப்பட்டது.
- மக்களின் நகர வாழ்க்கைத் தரம் குறித்த குடிமக்களின் கருத்தை நேரடியாகப் பதிவு செய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.
- இது பொதுப் போக்குவரத்து, கல்வி வசதிகள், சுகாதாரச் சேவைகள், குடிநீர் இருப்பு, வாழ்க்கைச் செலவினம், வேலை வாய்ப்புகள் போன்றவை குறித்த குடிமக்களின் கருத்தினைப் பதிவு செய்கிறது.
- எளிதாக வாழ்வதற்கான குறியீடு என்பது இந்தியா முழுவதும் உள்ள நகரங்களை அவற்றின் வாழ்க்கைத் தரம், பொருளாதாரத் திறன் மற்றும் நிலைத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடும் ஒரு விரிவான மதிப்பீடாகும்.
- இந்தக் குறியீட்டின் மூன்றாவது சுற்றானது 2022 ஆம் ஆண்டு நகர்ப்புற விளைவுகளின் கட்டமைப்பின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

## சுய-சார்பு இந்தியா நிதி


- சுயசார்பு இந்தியா நிதி என்பது இந்திய அரசினால் தொடங்கப்பட்ட ரூ.10,000 கோடி நிதியாகும்.
- இது இந்தியப் பங்குகள் மற்றும் பரிமாற்ற வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட இரண்டாம் பிரிவினைச் சேர்ந்த மாற்று முதலீட்டு நிதியாகும்.
- இது குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறைக்கு வளர்ச்சிக்கான மூலதனத்தை வழங்குவதற்காக அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது.

- இது தாய்-நிதி (முதன்மை) மற்றும் துணை-நிதி (நிதியின் நிதி) என்றழைக்கப்படும் கட்டமைப்பின் மூலமாக செயல்படுகிறது.
- தாய் நிதி என்பது ஒட்டுமொத்த நிதிய மூலதனத்தில் 20 சதவீதம் வரை முதலீடு செய்யும் இந்தியப் பங்குகள் மற்றும் பரிமாற்ற வாரிய நிதியாகும்.
- துணை நிதியானது மீதமுள்ள 80 சதவீத மூலதனத்தை மற்ற மூலங்களின் மூலமாக திரட்டப்படும் நிதியாகும்.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### 2041 ஆம் ஆண்டிற்குள் கார்பன் நடுநிலைத் தன்மை கொண்ட சுற்றுலா தலம்




- மதுரா-பிருந்தாவனம் ஆனது 2041 ஆம் ஆண்டிற்குள் "நிகர சுழியக் கார்பன் உமிழ்வு" கொண்ட சுற்றுலா தலமாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இதனால் பிராஜ் பகுதி முழுவதும் சுற்றுலா வாகனங்கள் இயங்கத் தடை செய்யப் படும்.
- பிருந்தாவனம் மற்றும் கிருஷ்ண ஜென்மபூமி போன்ற சில புகழ் பெற்ற யாத்திரை மையங்கள் இப்பகுதியினுள் அடங்கும்.
- அதற்கு மாறாக, பொதுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் மின்சார வாகனங்கள் மட்டுமே அப்பகுதிக்குள் அனுமதிக்கப்படும்.
- இப்பகுதியில் உள்ள அனைத்து 252 நீர்நிலைகள் மற்றும் 24 காடுகளும் புணரமைக்கப் படும்.
- இந்தப் பிராந்தியத்தின் எட்டு முக்கிய நகரங்களும் உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் குறுகிய-அகல இரயில் பாதை மூலம் இணைக்கப்படும்.
- மதுரா மற்றும் பிருந்தாவன் ஆகிய இரட்டை நகரங்களை இணைக்கும் தற்போதைய 12.9 கிமீ குறுகிய இரயில் பாதையானது மீண்டும் மேம்படுத்தப்படும்.
- நிகர சுழியக் கார்பன் உமிழ்வானது கார்பன் நடுநிலை என்று குறிப்பிடப்படுகிறது.
- இதன் பொருள் ஒரு நாடு/மாநிலம் அதன் உமிழ்வை சுழிய நிலை அளவிற்குக் குறைக்கும் என்பதல்ல.
- அதன் பொருள், ஒரு நாட்டின்/மாநிலத்தின் உமிழ்வுகள் ஆனது, வளிமண்டலத்தில் உள்ள பசுமை இல்ல வாயுக்களை உறிஞ்சி அகற்றுவதன் மூலம் ஈடுசெய்யப்படும் ஒரு நிலையாகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## QS ஆணையத்தின் ஆசியப் பல்கலைக்கழகங்களின் தரவரிசை 2023




- ஐக்கிய இராஜ்ஜியத்தில் அமைந்துள்ள குவாக்குரேலி சிமண்ட்ஸ் (QS) எனப்படும் தர வரிசை ஆணையமானது 2023 ஆம் ஆண்டிற்கான ஆசியப் பல்கலைக்கழகத் தர வரிசையினை வெளியிட்டது.
- 2023 ஆம் ஆண்டு தரவரிசையானது 15வது தரவரிசையாகும்.
- இது ஆசியக் கண்டத்தில் உள்ள சிறந்தப் பல்கலைக்கழகங்களை தரவரிசைப் படுத்துகிறது.
- இந்தத் தரவரிசையானது 11 குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- இந்தத் தரவரிசையில் சீனாவின் பீக்கிங் பல்கலைக்கழகம் முதலிடத்தில் உள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டு தரவரிசையில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தது.

- சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் மற்றும் சீனாவில் அமைந்துள்ள சிங்குவா பல்கலைக் கழகம் ஆகியவை மற்ற முன்னணி பல்கலைக்கழங்கங்கள் ஆகும்.
- சீனாவைச் சேர்ந்த 5 பல்கலைக் கழகங்கள் முதல் 10 இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- மொத்தம் 118 இந்திய நிறுவனங்கள் இந்தத் தரவரிசையில் இடம் பெற்றுள்ளன.
- 5 இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகங்கள், இந்திய அறிவியல் கல்வி நிறுவனங்கள் மற்றும் டெல்லி பல்கலைக் கழகம் ஆகியவை இந்தத் தரவரிசையில் முதல் 100 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளன.
- இதன் முதல் 200 இடங்களில் மொத்தம் 19 இந்தியப் பல்கலைக் கழகங்கள் இடம் பெற்று உள்ளன.
- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகமானது (40) இந்தத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது.
- இந்தியாவின் இரண்டாவது முன்னணி பல்கலைக் கழகம் டெல்லியின் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி கழகமாகும் (46வது இடம்).
- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது 52வது இடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகம் (53), கரக்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகம் (61), கான்பூரின் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி கழகம் (66), மற்றும் டெல்லி பல்கலைக்கழகம் (85) ஆகியவை இடம் பெற்றுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## வடோதரா மாநகராட்சிக் கழகப் பத்திரம்




- அமெரிக்க கருவூலத் துறையின் தொழில்நுட்ப உதவி அலுவலகத்தின் உதவியுடன் மாநகராட்சிக் கழகப் பத்திரத்தை வெளியிட்ட இந்தியாவின் இரண்டாவது நகரமாக வதோதரா மாறியது.
- இந்தப் பத்திரமானது வடோதரா நகரத்தில் மேற்கொள்ளப்படும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி வழங்கும்.
- மாநகராட்சிக் கழக நிதியானது சாலைகள், எரிசக்தி, நீர், சுகாதாரம் மற்றும் பிற அத்தியாவசியத் தேவைகள் உள்ளிட்ட முக்கிய மூலதனத் திட்டங்களுக்கு நிதி வழங்க

உதவும்.

- 2017 ஆம் ஆண்டில் இத்தகையப் பத்திரத்தை வெளியிட்ட முதல் நகரம் பூனா ஆகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## சர்வதேச கன்னட ரத்னா விருது 2022

- சர்வதேச கன்னட ரத்னா விருதுக்கு யதுவீர் கிருஷ்ணராஜ சாமராஜ வாடியார் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- இவர் முன்னாள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார்.
- துபாயில் உள்ள கன்னடர்கள் கன்னட ராஜ்யோத்சவாவைக் கொண்டாடும் வகையில் இந்த விருதை வழங்கியுள்ளனர்.



## TELEMEDICON 2022




- 18வது சர்வதேசத் தொலை தொடர்பு மருத்துவ வசதி மாநாடானது கொச்சியில் உள்ள அமிர்தா மருத்துவமனையில் நடைபெற்றது.
- இந்தியத் தொலைத்தொடர்பு மருத்துவ வசதி சமூக அமைப்பு மற்றும் கேரளா சாப்டர் அமைப்பு ஆகியவை இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்கின்றன.
- இது சுகாதாரக் கட்டுப்பாட்டு அமைப்புகள், சுகாதார நிதி வழங்கும் ஆணையங்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் சர்வதேச நிபுணர்களை உள்ளடக்கியத் தளங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்நிகழ்வின் முக்கிய கருத்துரு, 'நிலையான தொலை தொடர்பு மருத்துவ வசதி

மற்றும் எண்ணிம சுகாதார நல வசதிகள் மூலம் சுகாதார அமைப்புகளை வலுப் படுத்துதல்' என்பதாகும்.

## இந்தியத் தேசிய நில வரைபடவியல் சங்க மாநாடு




- இந்தியத் தேசிய நில வரைபடவியல் சங்கத்தின் (INCA) 42வது சர்வதேச மாநாடானது டேராடூனில் நடைபெற்றது.
- இது தேசிய நீரியல் வரைபட அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, 'எண்ணிம நில வரைபடவியல் மூலம் நீர் வளம் சார்ந்த பொருளாதாரத்தினை மேம்படுத்துதல்' என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## இந்தியாவின் முதல் அரசு உரிமைப் பெற்ற பசுமைப் பத்திரங்கள் கட்டமைப்பு




- மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகம், இந்தியாவின் முதல் அரசு உரிமைப் பெற்ற பசுமைப் பத்திரக் கட்டமைப்பிற்கு தனது ஒப்புதலை அளித்துள்ளது.

- 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற COP 26 என்ற மாநாட்டில் பிரதமர் அவர்கள் கூறியபடி, "பஞ்சாமிர்த்" என்பதன் கீழ் இந்தியாவின் உறுதிப்பாடுகளின் முன்னேற்றத்திற்கு ஏற்ப இந்தக் கட்டமைப்பு இயங்கி வருகிறது.
- பசுமைப் பத்திரங்கள் நிறுவனங்கள், நாடுகள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களால் நேர்மறையான சுற்றுச்சூழல் அல்லது பருவநிலை பலன்களைக் கொண்ட திட்டங்களுக்கு பிரத்தியேகமாக நிதியளிப்பதற்காகவும், முதலீட்டாளர்களுக்கு நிலையான வருமானக் கொடுப்பனவுகளை அளிப்பதற்காகவும் வழங்கப்படுகின்றன.
- இவற்றுள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல், தூய்மையான போக்குவரத்து மற்றும் பசுமைத் தரக் கட்டிடங்கள் போன்றவை அடங்கும்.
- இந்தப் பத்திரங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் பசுமைத் திட்டங்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★